

விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் கொங்கராம்பூண்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும், கிளைக் செயலாளருமான ஏழுமலை மற்றும் அவருடைய மகன் இருவரும் வாகன விபத்தில் உயிரிழந்தனர் என்பதை அறிந்து நேரில் சென்று வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் ஏ.சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர் ஜெ.ஜெயபால், பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டப் பொருளாளர், நகர் ஒன்றியக் கிளை நிர்வாகிகள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

### திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு!

### மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப். 14 -

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் இரண்டாவது முறையாக வெற்றிபெற்ற கனிமொழி கருணாநிதி எம்.பி. பல்வேறு தேதிகளில் தொகுதி முழுவதும் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்துள்ளார்.

இதன் நிறைவாக திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் திருச்செந்தூர், உடன்குடி ஒன்றியங்களில் உள்ள பகுதிகளில் 16.02.2025 அன்று வாக்காளர்களை நேரடியாக சந்தித்து நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணி நல்லூர்;, 5.20 மணி அம்மன்புரம், 5.40 மணி கானம் பேரூராட்சி வள்ளி



விளை, 6 மணி பூச்சிக்காடு, மாலை 6.20 மணி காயாமொழி, மாலை 6.40 மணி நடுநாலுமூலைக்கிணறு, இரவு 7.00 மணி கீழ நாலுமூலைக்கிணறு, இரவு 7.20 மணி ந.முத்தையாபுரம், இரவு 7.50 மணி பரமன்குறிச்சி பஜார், இரவு 8.05 மணி வெள்ளாளன்விளை, இரவு 8.20 மணி உடன்குடி பஜார் இரவு 8.40 மணி செட்டியாபத்து, இரவு 9 மணி மெஞ்ஞானபுரம் ஆகிய ஊர்களில் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட ஒன்றிய, பகுதி செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

### சீர்காழி நகர இளைஞரணி அமைப்பாளர்

# எம்.ஆர்.ஆர். ராஜசேகரன் மறைவு!

### கழகத்தினர் நேரில் அஞ்சலி!

மயிலாடுதுறை, பிப். 14-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர கழக முன்னாள் பொறுப்பாளர் மறைந்த எம்.ஆர்.ராதா மகனும், பொறியாளர் எம்.ஆர்.ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி முன்னாள் துணைச் செயலாளர் எம்.ஆர். ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் சகோதரரும், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரிராஜசேகரன் கணவரும் சீர்காழி நகர இளைஞரணி அமைப்பாளருமான எம்.ஆர்.ஆர்.ராஜசேகரன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த எம்.ஆர்.ஆர். ராஜசேகரனுக்கு மனைவி துர்கா பரமேஸ்வரி ராஜசேகரன் உள்ளார். சீர்காழியில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த எம்.ஆர்.ஆர். ராஜசேகரன் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

### புதுச்சேரி மக்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சிப்பதாகக் கூறி

# புதுச்சேரி சட்டப்பேரவையில் தி.மு.க. - காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு!

புதுச்சேரி, பிப். 14 -

புதுச்சேரி சட்டப்பேரவையின் 15-வது பேரவையின் ஐந்தாவது கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு கூடியது. முதலில் புதுச்சேரி முன்னாள் முதல்வர் எம்.டி.ஆர். இராமச்சந்திரன், முன்னாள் பிரதமர் டாக்டர் மன் மோகன்சிங் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களுக்கு புதுவை சட்டசபையில் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து சபையின் அடுத்த அலுவலுக்கு சபாநாயகர் செல்வம் சென்றார். அப்போது **எதிர்க்கட்சி தலைவர் இரா.சிவா** குறுக்கிட்டு பேசியதாவது: -

ஒன்றிய அரசு தொடர்ந்து புதுவையை வஞ்சித்து வருகிறது. நிதி கமிஷனில் புதுவையைச் சேர்க்கவில்லை. மத்திய பட்ஜெட்டில் புதுவைக்கு கூடுதல் நிதி வழங்கவில்லை. ரெயில்வே, துறைமுக விரிவாக்க திட்டங்கள் இடம்பெறவில்லை. நாட்டிலேயே பெஞ்சல் புயலால் புதுவைதான் அதிகளவில் பாதிக்கப்பட்டது. ஆனால் அதற்கான நிவாரண நிதியை ஒன்றிய அரசு வழங்கவில்லை. மத்தியிலும், புதுவையிலும் ஒரே கூட்டணியின் ஆட்சிதான் நடக்கிறது. தமிழகத்தை போல மாற்று ஆட்சி இருந்தாலும், வஞ்சிப்பதில் அர்த்தம் இருக்கும். இதனால் மத்திய அரசு புதுவையை வஞ்சிப்பதை கண்டித்து சட்டசபையிலிருந்து வெளிநடப்பு செய்கிறோம் என்றார்.

சபாநாயகர் செல்வம் குறுக்கிட்டு, பெஞ்சல் புயல் நிவாரணமாக மத்திய அரசு ரூ.61 கோடி வழங்கியுள்ளது என்றார்.

**அமைச்சர் நமச்சிவாயம்:** மத்திய அரசு புதுவைக்குத் தேவையான நிதியை தொடர்ந்து வழங்கி வருகிறது. மத்திய அரசின் ஒத்துழைப்போடுதான் புதுவையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார்.

அவருக்கு ஆதரவாக அமைச்சர் சாய்சரவணக்குமார், பா.ஜனதா எம்.எல்.ஏ.க்கள் கல்யாணசுந்தரம், ஜான்குமார், ரிச்சர்டு, அசோக்பாபு, ராமலிங்கம், வெங்கடேசன், சுயேச்சை எம்.எல்.ஏ.க்கள் சிவசங்கர், சீனிவாச அசோக் ஆகியோர் பேசினர். இதற்கு எதிராக தி.மு.க. காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் பேசினர்.

இதனால் சபையில் கடும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

பா.ஜனதா எம்.எல்.ஏ.க்கள், ஜான்குமார், கல்யாணசுந்தரம் ஆகியோர்மத்திய அரசு பற்றி எதிர்க்கட்சியினர் பேசிய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதற்கு தி.மு.க. எம்.எல்.ஏ. நாஜிம், இன்று உங்கள் நாடகம் என்ன? வெளியில் ஒன்று செய்வீர்கள், உள்ளே ஒன்று செய்வீர்கள், முதலில் மண்ணை நேசியுங்கள், பின்னர் கட்சியை நேசியுங்கள் என்றார்.

அப்போது **முதலமைச்சர் ரங்கசாமி** பேசியதாவது:

எதிர்க்கட்சிகள் மத்திய அரசு நிதி தரவில்லை என குற்றம்சாட்டி பேசுகின்றனர். கடந்த ஆட்சியில் ஒரே ஒரு செங்கல்லைக்கூட எடுத்து வைக்க முடியவில்லை என கூறினர்.

5 ரூபாய்கூட மத்திய அரசிடம் இருந்து பெற முடியவில்லை என உள்துறை அமைச்சராக இருந்தவரே கூறியுள்ளார். தற்போது எத்தனை கோடியில் பணிகள் நடக்கிறது? காலாப்பட்டில் கடந்த 3 நாட்களில் ரூ.30 கோடிக்கு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. எந்த திட்டத்தை அரசு செயல்படுத்த வில்லை? கொண்டு வரவில்லை? என சுட்டிக்காட்டுங்கள். இலவச அரிசி வேண்டும் என மக்கள் கேட்டனர். ரேஷன் கடைகளை திறந்து அரிசி வழங்கியுள்ளோம். புயல் நிவாரணமாக அனைத்து ரேஷன் கார்டுக்கும் ரூ.5 ஆயிரம், விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.30 ஆயிரம் வழங்கியுள்ளோம். மத்திய அரசு தேவையான நிதியை வழங்கி வருகிறது. மேலும் பல்வேறு வகைகளில் கூடுதல் நிதி பெறவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

இருப்பினும் இந்த விளக்கத்தை ஏற்காமல் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் நாஜிம், அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், நாகதியாகராஜன், ரமேஷ்பரம்பத், வைத்தியநாதன் ஆகியோர் சட்டசபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.


